S.S.உதயகுமார் [1] &- L. றெஜினோல்ட் [2]

# "யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்களின் வாழ்வாதார நிலை பற்றிய ஓர் ஆய்வு" (யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவைச் சிறப்பாகக் கொண்டது)

1. பொருளியற்துறை, யாழ்பல்கலைக்கழகம், ssuthayan@yahoo.com
2. பொருளியற்துறை, யாழ்பல்கலைக்கழகம்.

**ஆய்வுத் தலைப்பு :**

"யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்களின் வாழ்வாதார நிலை பற்றிய ஓர் ஆய்வு" (யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவைச் சிறப்பாகக் கொண்டது)

**ஆய்வுச் சுருக்கம்**

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்களின் வாழ்வாதார நிலை என்னும் இந்த ஆய்வானது இலங்கையின் வடபுலத்தே 2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தினைத் தொடர்ந்து யாழ்ப்பாணப்பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களின் வாழ்வாதார நிலையினை ஆராய்வதாகவுள்ளது. இந்த ஆய்வின் பிரதான நோக்கம் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தில் யுத்தம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தினையும் அவர்களின் தற்போதைய வறுமை நிலையினையும் கண்டுபிடிப்பதாக அமைந்துள்ளது. இந்த நோக்கத்துக்கேற்ப பின்வரும் இரண்டு கருதுகோள்கள் முன்வைக் கப்பட்டுள்ளது முதலாவதாக "மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரம் யுத்தத்தின் பின் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது" என்ற கருதுகோளும் இரண்டாவதாக "மீளக்குடியமர்த் தப்பட்டவர்கள் முழு வறுமையினை அனுபவிக்கின்றார்கள்" என்ற கருதுகோளும் முன்வைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது மேலும் இந்த ஆய்வுக்குத் தேவையான தரவுகள் முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலங்களில் இருந்து பெறப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட பச்சைத் தரவுகள் புள்ளிவிபரவியல் மென்பொருளான ளீளுளு என்பதன் உதவியுடன் புள்ளிவிபரவியல் தரவுகளாக்கப்பட்டு விவரணப் புள்ளிவிபரவியல் முறையினை அடிப்படை யாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவாக மீளக்குடியமர்த்தப் பட்டவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளமையும் அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் முழு வறுமையில் வாழ்கின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது.

முநலு றுழசுனுளு : இடப்பெயர்வு, மீள்குடியேற்றம், வறுமை, வாழ்வாதாரம், முழுவறுமை

**அறிமுகம்**

கடந்த மூன்று தசாப்தங்களாக வடக்குக் கிழக்குப் பகுதியில் இடம்பெற்ற குடியுரி மைப்போர் இலங்கை அரசின் பாரிய படை நடவடிக்கையுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு போர் நடைபெற்ற காலப்பகுதியில் தடைப்பட்டிருந்த இலங்கையின் பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றன. பயங்கர வாதத்திற்கு எதிரான நடவடிக்கை என்ற நிலை மாறி தற்போது அபிவிருத்திக்கான நடவடிக்கை என்ற பேச்சு அரசினால் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வகையில் வடக்குக் கிழக்குப் பகுதி மற்றும் ஏனைய பிற மாவட்டங்களிலும் பல்வேறு அபிவிருத்திச் செயற்பா டுகளும் இடம்பெற்ற வண்ணம் உள்ளன. ''கிழக்கின் உதயம்'' என்றும், ''வடக்கின் வசந் தம்'' என்றும் இரு பெரும் திட்டத்தின் கீழ் முறையே கிழக்கு மற்றும் வடக்குப் பகுதிகள் அபிவிருத்தி செய்யப்படுவதாக அரசாங்கம் கூறிவருகின்றது. வடக்கு மாகாணத்தின் தலை நகராக விளங்கும் யாழ்ப்பாணத்துக்கான ஒரேயொரு தரைவழிப்பாதையான யு9 பாதை மக்கள் பாவனைக்காக திறந்துவிடப்பட்டுள்ளதுடன் யாழ்ப்பாணம் நோக்கி தென்னிலங்கை நடைபாதை வியாபாரிகளும், வர்த்தகர்களும் நாளாந்தம் வருகை தந்த வண்ணம் உள்ளனர். வங்கிகளும், நிதிநிறுவனங்களும், பல்தேசிய கம்பனிகளும் போட்டி போட்டுக் கொண்டு யாழ்ப்பாணத் துக்குள் தமது கால்களைப் பதித்துள்ளனர் பெருந் தொகையான சிங்கள மக்கள் நாளாந்தம் சுற்றுலாப் பயனிகளாக வந்து கொண்டு இருக்கிறார்கள். இது இவ்வாறு இருக்கையில் மறு புறம் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றம் என்பதும் துரிதமாக இடம்பெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது. இவ்விதம் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதரங்களில் யுத்தம் ஏற்படுத்திய விளைவு என்ன என்பதும் தற்போதைய அவர்களின் நிலை என்ன என்பதும் ஆராயப்பட வேண்டிய விடயமாகும். போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்பதற்கு முன்னர் இப் போரினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மக்களை சற்று சிந்திப்பது அவசியம் என்ற வகையில் குறித்த ஆய்வானது யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவில் யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியேறியவர்களின் வாழ்வாதார நிலையினை ஆராய்வதாகவுள்ளது.

**ஆய்வுப் பிரச்சனை**

- போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்பதற்கு முன்னர் போரினால் பாதிக்கப்பட் டவர்களின் வாழ்வாதார நிலை என்ன என்பது ஓர் ஆய்வுக்குரிய விடயமாகவுள்ளது.
- இலங்கையில் 2009 இல் ஏற்பட்ட இறுதிக்கட்ட யுத்தத்தில் தமது உயிர்களையும், உடல் அங்கங்களையும், உடைமைகளையும் இழந்த அப்பாவி மக்களினுடைய தற்போ தய நிலை என்ன? என்பது ஓர் ஆய்வுக்குரிய விடயமாகவுள்ளது.
- போருக்குப் பின்னரான அபிவிருத்தி என்னும் தொனிப்பொருளில் பல மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் வடக்கு, கிழக்கு மற்றும் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படுன்றன இவ்விதம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்கள் போரி னால் பாதிக்கப்பட்ட மக்களின் வறுமையைக் குறைப்பதில் எந்தளவுக்கு பங்களிப்புச் செய்கின்றன? என்பது ஓர் ஆய்வுக்குரிய விடயமாக அமைந்துள்ளது.

**ஆய்வின் நோக்கம்**

- மீளக் குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தில் போர் ஏற்படுத்திய தாக்கத்தினைக் கண்டறிதல்
- மீளக் குடியமர்த்தப்பட்டவர்களின் வறுமை நிலையினை இனங்கானல்.
- மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தினைக் கட்டியெழுப்புவதன் ஊடாக எவ்வாறு அவர்களின் வறுமையைக் குறைக்கலாம் என பரிந்துரை வழங்கல்

**ஆய்வின் எழுவினாக்கள்**

- மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தில் போர் ஏற்படுத்திய தாக்கம் எத்த கையது ?
- மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வறுமை நிலை என்ன?
- மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதார அபிவிருத்திக்கான திட்டங்கள் மேற்கொள் ளப்படுகின்றனவா ?

- மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வறுமைக் குறைப்பில் அவற்றின் வகிபாகம் யாது?

**இலக்கிய மீளாய்வு**

Venkathesh Salagrama, Food and Agriculture Organization of United Nations Rome,(2006). **"Trends in poverty and livelihoods in Costal fishing communities of Oriss State India"** என்னும் ஆய்வுக் கட்டுரையானது நிலைத்து நிற்க்கும் வாழ்வாதாரம் என்னும் அனுகுமுறையின் ஊடாக இந்தியாவின் ஒரிசா மாநிலத்தினுடைய கடலோரச் சமூகத்தினுடைய வறுமையினையும் வாழ்வாதரத்தினையும் ஆராய்கின்றது."

Elodie Douarin, Julie litchfeld and Rachel Sabates – Wheeler (2010) **"Poverty, livelyhood and ware legacies: the case of post – ware rural Kosovo"** என்னும் ஆய்வுக் கட்டுரையில் கொசோவா நாட்டில் இடம்பெற்ற போர் அவர்கள் வாழ்வாதாரத்தில் ஏற்படுத்திய தாக்கத்தினை விளக்குவதாகவுள்ளது.

தியாகராஜா தவபாக்கியராசா (2007) என்பவரினால் யாழ்.பல்கலைக்கழகத்தின் முது கலைமாணி கற்கை நெறியின் பகுதியாக **"போரினால் ஏற்பட்ட வறுமையும் அதனால் மக்களின் வாழ்வாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்பும் - யாழ் மாவட்டம்"** என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இவர் உள்நாட்டு போரின் காரணமாக உற்பத்திதுறைகள் பாதிக்கப்பட்டு அதன் மூலம் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக விளக்கியுள்ளார்.

Uthayakumar, S.S . and Sivatharsan P (2012) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் மீனவக் குடும்பங்களின் வறுமை நிலை பற்றிய ஓர் ஆய்வு முடிவின் படி "யுத்தத்தின் விளைவுகளால் வந்த கடல் வலயத் தடைச்சட்டங்களும் அதன் ஊடான கட்டுப்பாடுகளும் பிரதேச மக்களது பொருளாதார மேம்பாட்டுக்கு பாரியசவால்களாக அமைந்துள்ளன'' (]:265 0எனக் குறிப்பிட்டுள்ளனர்.

திரு. நாகராசா மில்லஸ் (2007) என்பவரினால் முதுகலைமாணியில் அபிவிருத்திக் கற்கை நெறியின் தேவையை பூர்த்தி செய்கின்ற ஓர் அலகாக **"வலி கிழக்குப் பிரதேச மக்களின் வறுமைத் தணிப்பில் வாழ்வாதாரக் கருத்திட்டங்களின் பங்கு"** என்னும் தலைப்பில் செய்யப்பட்ட ஆய்வில் வாழ்வாதாரக் கருத்திட்டங்கள் வறுமையைக் குறைந்துள்ளது. எனினும் உள்ளக மற்றும் வெளியக குறைபாடுகளால் முழுமையான வெற்றியைத் தரவில்லை என்று கூறியுள்ளார்.

செல்வி வைலற் நீக்கிலாஸ் (2009) என்பவரால் முதுகலைமாணியின் அபிவிருத்திக் கற்கை நெறியின் ஒரு பகுதியை பூர்த்தி செய்யும் முகமாக **"யுத்த அனர்த்தமும், வள முகா மைத்துவமும் - யாழ்ப்பாணப் பிரதேச செயலகப் பிரிவு குறித்த சிறப்பாய்வு"** என்ற தலைப் பின் கீழ் இந்த ஆய்வுக் கட்டுரை ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற போர் காரணமாக வடக்கு கிழக்குப் பகுதிகளின் பொருளாதாரப் பங்களிப்பு குறைந்து வருகின்றது எனக் கூறியுள்ளார்.

**கருதுகோள்**

- மீளக் குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.
- மீளக்குடியமர்த்தப்பட்டவர்கள் முழு வறுமையில் வாழ்கின்றார்கள்

## ஆய்வு முறையியல்

- **தரவு மூலங்கள்**

ஆய்வுக்குத் தேவையான தரவுகள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகளில் இருந்து பெறப்பட்டுள்ளது. முதலாம் நிலைத் தரவுகள் ஆற்வாளனால் வடிவமைக்கப்பட்ட வினாக் கொத்துக்கள் மூலம் ஆய்வுக்களத்துக்கு நோரடியாக சென்று திரட்டப்பட்டுனள்ளது. இரண்டாம் நிலைத்தரவுகளினைப் பொறுத்தரை அவை பெரும்பாலும் யாழ்ப்பாண பிரதேச செயலகத்தின் புள்ளிவிபரத் திணைக்களத்தில் இருந்து திரட்டப்பட்டுள்ளது.

- **மாதிரிஎடுப்பு நுட்பம்**

குறித்த ஆய்வுக்கு நிகழ்தகவு சார்ந்த மாதிரி எடுப்பு நுட்பமே பயன்படுத்தப்பட்டுள்ளது அந்த வகையில் குறித்த குடியானது ஒரு பல்லினக் குடியாக இருப்பதனால் படைமுறை மாதிரி எடுப்பு நுட்ப்பமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இங்கு பிரதான படையாக்கற் காரணியாக தொழில் காணப்படுகின்றது.

மேலும் குறித்த ஆய்வுக்கு ஆய்வாளனால் மாதிரி அமைத்தலில் விகிதசம ஒதுக்கீட்டு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் குடியினுடைய பருமனுக்கு குடிப்படைகளின் பரம்பல்கள் என்ன

விகிதத்தில் இருக்கின்றனவோ அதே விகித்தத்தில் மாதிரிப் பருமனுக்கு மாதிரியில் உள்ள படைகளின் பருமன்கள் அமையும் வகையில் மாதிரி அமைக்கப்பட்டுள்ளது.

- சமன்பாடு

ni= ( Ni /N)n ஆகும்


ni :- i யாவது படை மாதிரிப் பருமன்

N :- மொத்தக் குடியின் கூட்டுத் தொகை

Ni :- i யாவது படையின் கூட்டுத் தொகை

n :- குடிமாதரிப் பருமன்

**அட்டவணை – 1,**
**மாதிரி எடுத்தல் செய்முறை**




மூலம் : புள்ளிவிபர திணைக்களம், யாழப்பாணப் பிரதேச செயலகம்

- **தரவுப் பகுப்பாய்வு**

வினாக்கொத்துகள் மூலம் பெறப்பட்ட பச்சைத் தரவுகள் புள்ளிவிபரவியல் மென்பொரு ளான ளீளுளு என்பதன் உதவியுடன் புள்ளிவிபரவியல் தரவுகளாக்கப்பட்டன என்பதுடன் குறித்த தரவுகளைப் பகுப்பாய்வு செய்வதற்க்கு விபரணப் புள்ளிவிரவியல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளன, வினாக்கொத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வழங்கப்பட்ட தெரிவுகளுக்கு ஆய்வுக்கு உட்பட்டோா் அளித்த பதிலுக்கு எற்ப அவை நுற்றுக்கு எத்தனை விகிதம் என்று கணிப்பிட்டு விகிதாசரா அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளது. மாதிரிக்கு கிடைத்த வகிதம் குடிக்கும் பொருந்தும் என்ற வகையில் விளக்கப்பட்டுள்ளது. தேவைப்படும் இடங்களில் அட்டவணைகளும் வரைபடங்களும் வழங்கப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சம் ஆகும் வரைபடம் என்னும் போது சலாகை வரைபடங்களும் வட்ட வரைபடங்களும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## தரவுப் பகுப்பாய்வு

மீளக் குடியமர்த்தப் பட்டவர்களின் வாழ்வாதாரத்தில் போரினால் ஏற்பட்ட தாக்கத்தினை நோக்கும் முதலில் போரினால் மக்களின் வாழ்வாதாரச்சொத்துக்களில் ஏற்ப்பட்ட இழப்பினை நோக்கும்போது ரூபா 250000 - 500000 பெறுமதியான வாழ்வாதாரச் சொத்துக்களை 89.5 சத வீத மானவர்களும் ரூபா 500000 - 1000000 பெறுமதியான வாழ்வாதாரச் சொத்துக்களை 8.5 சதவீத மானவர்களும் ரூபா 1000000 - 1500000 பெறுமதியான வாழ்வாதாரச் சொத்துக்களை 1.5 வீத மானவர்களும் ரூபா 1500000 - 2000000 பெறுமதியான வாழ்வாதாரச் செத்துக்களை 0.5 வீதமானவர்களும் இழந்துள்ளனர். சராசரியாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஏற்பட்ட வாழ் வாதார சொத்திழப்பு ரூபா 329575 ஆகும்.

மேற்படி வாழ்வாதாரச் சொத்திழப்பினால் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வருமானம் வெகுவாகக் குறைந்துள்ளது. இடப்பெயா்வுக்கு முன்னா் ஆகக் குறைந்தது ரூபா 1000 - 5000 இடையிலான வருமானத்தினை 21.5 வீதமானவர்களே உழைத்திருக்கின்றார்கள் இந்நிலை இடப்பெயா்வுக்கு பின்னா் 50.7 வீதமாக அதிகரித்துள்ளது அதேவேளை இடப்பெயா்வுக்கு முன்னா் 20.7 வீதமானவர்கள் ரூபா 10000 - 15000 இடையில் வருமானம் உழைத்திருக்கின்

றார்கள் ஆனால் இடப்பெயர்வுக்கு பின்னர் இந்நிலை 3.1 வீதமாக குறைவடைந்துள்ளது.

மேலும் மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வருமானம் மற்றும் செலவு நிலைகளை எடுத்து நோக்கும் போது இடப்பெயர்வுக்கு முன்னர் சராசரி வருமானம் 9250 ரூபாவாகவுள்ளது அதேவேளை சராசரிச் செலவு 8790 ரூபாவாகவுள்ளது. இடப்பெயர்வுக்கு பின்னர் சராசரி வருமானம் 5630 ரூபாவே ஆகும். அதேவளை சராசரிசெலவு 6400 ரூபாவாகும் போருக்குப் பின்னர் அவர்களினுடைய வருமானத்திலும் செலவிலும் ஏற்பட்ட இந்த வீழ்ச்சியானது அவர் கள் அடிப்படைத்தேவைகளைக் கூட பூர்த்தி செய்யாமலேயே வாழ்கின்றார்கள் என்பதனையே எடுத்துக்காட்டுகின்னது. அட்டவணை - 2 இதனை விளக்குகின்றது.

**அட்டவணை – 2 மீளக்குடியமர்த்தப்பட்டோரின் வருமானம் மற்றும் செலவு**

| விடயம் | இடப்பெயர்வுக்கு முன்னர் | | | இடப்பெயர்வுக்கு பின்னர் | | |
|---|---|---|---|---|---|---|
| | கூடியது | குறைந்தது | சராசரி | கூடியது | குறைந்தது | சராசரி |
| வருமானம் | 35000 | 1000 | 9250 | 15000 | 1000 | 5630 |
| செலவு | 18000 | 1500 | 8790 | 18000 | 2000 | 6400 |

மூலம் : - ஆய்வாளனினால் விருத்தி செய்யப்பட்டது

மீளக்குடியமர்த்தப்பட்டவர்களில் 76.2 வீதமானவர்கள் தமது வாழ்வாதாரத்தில் ஈடுபடும் போது திருப்தியற்றவர்களாக உள்ளார்கள் இடப்பெயர்வுக்கு முன்னர் இந் நிலை வெறும் 3.1 வீதம் மட்டுமே ஆகும். மேலும் இடப்பெயர்வுக்குப் பின்னர் மக்கள் தமது வாழ்வாதாரத்துக்காக பிறருடன் தங்கி வாழும் அவலம் ஏற்பட்டுள்ளது. இடப்பெயர்வுக்கு முன்னர் 46.5 வீதமானவர் கள் மாத்திரமே வாழ்வாதாரத்துக்காக ஏனையோருடன் தங்கி இருக்கவேண்டிய நிலை காணப் பட்டது ஆனால் இந் நிலை இடப்பெயர்வுக்குப் பின்னர் 69.2 வீதமாக அதிகரித்துள்ளது.

அடுத்து மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வறுமை நிலையினை நோக்கும்போது 74.6 வீதமானவர்கள் போதிய உணவு அற்றவர்களாகக் காணப்படுகின்றார்கள் 73.8 வீதமானவர்கள் தமக்குத் தேவையான போதிய உடையைப் பெறமுடியாதவர்களாக உள்ளார்கள். 88.5 வீத மானவர்கள் போதிய போசாக்கு அற்றவர்களாக உள்ளார்கள். 42 வீதமானவர்கள் மலசலகூட வசதியற்றவர்களாக உள்ளார்கள். 39 வீதமானவர்கள் கிணறு வசதியற்றவர்களாக உள்ளார் கள். 38.4 வீதமானவர்கள் சுத்தமான குடிநீரைப் பெறமுடியாதாவர்களாக உள்ளார்கள். 86 வீதமானவர்கள் போதுமான தகவல்களினைப் பெறமுடியாதவர்களாக உள்ளார்கள். பாடசா லை செல்லும் வயதில் 11.5 வீதமானவர்கள் பாடசாலை செல்வதில்லை 83.8 வீதமானவர்கள் போதிய கல்வி அறிவினைப் பெற முடியாதவர்களாகவே உள்ளார்கள் மேலும் 49.2 வீதமான வர்கள் ஒரு அறைவீட்டிலேயே வசிக்கின்றார்கள். 8.1 வீதமானவர்கள் தறப்பால் வீட்டிலேயே வசித்து வருகின்றார்கள். 64.6 வீதமானவர்கள் வானொலி பாவனையற்றவர்களாகக் காணப்ப டுகின்றார்கள். 89.9 வீதமானவர்கள் தொலைக்காட்சி பாவனையற்றவர்களாக உள்ளார்கள். 91.5 வீதமானவர்களிடம் செய்தித்தாள் பார்க்கும் பழக்கம் அற்றதாகவே உள்ளது. .33.8 வீதமானவர்கள் தமது அன்றாட தேவைகளுக்காக நடந்து திரிபவர்களாகவே உள்ளார்கள்.

## பெறுபேறு

குறித்த ஆய்வின் ஊடாக கிடைத்த பெறுபேற்றினை நோக்கும் போது மீளக்குடி யமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட் டுள்ளது அத்துடன் அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் முழுவறுமையில் வாழ்கின்ற மையும் கண்டறியப்பட்டுள்ளது.

## முடிவுரை

யுத்தத்தால் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதார நிலை என்னும் இவ் ஆய்வின் ஊடாக மீளக் குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளமையும் அவர்களில் அரைவாசிக்கும் மேற்ப்பட்டவர்கள் முழு வறுமையில் வாழ்கின்றமை யும் வெளிப்படையாகப் புலப்படுகின்றது. இவர்களினுடைய வாழ்வாதார அபிவிருத்திக்கு பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார உதவிகளும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு இல்லை என்பதுடன் அவை நிலைபேண் தன்மை அற்றவையாகவும் அமைந்துள்ளன.

போர் நிறைவுற்று பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் பரவலாக இடம்பெற்ற வண்ணம் உள்ள நிலையிலும் இந்த மீளக்குடியமர்த்தப்பட்டவர்களின் வாழ்வாதாரம் குறிப்பிட்டுக் கூறும் அளவுக்கு முன்னேற்றம் காணதநிலையில் உள்ளமை அபிவிருத்தி தொடர்பான நியாயமற்ற தன்மையினையே எடுத்துக்காட்டுகின்றது உண்மையில் அபிவிருத்தி என்பது இவ்விதம் பாதிக்கப்பட்ட மக்களையும் உள்வாங்கிக்கொள்ளும் வகையில் ஏற்படும் போதே உண்மையான அபிவிருத்தியாக அமைவதுடன் பேண்தகு அபிவிருத் தியாகவும் இருக்கும்.

**உசாத்துணை நூல்கள்**


1. Ramani Gunatilaka, April 1999, "Rural infrastructure programmes for poverty Reduction:policy issues from the sri lanka Experience" institute of policy studies, Colombo, sri lanka.
2. Ian scones,1998, "Sustainable Rural livelihoods", A Framework for Analysis; IDs working paper 72.
3. The World Bank (1990) what do We Know above the poor, World Development Report, Oxford University press, page 50-70
4. Hans Gsanger , Myriam Fernando (2004) "poverty monitoring in Asia", organised by CEPA Institution
5. Frank Ellis, Milton Kutengula and Alfred Nyasulu (2002) " DRAFT Livelihood and Rural poverty Reduction in Malawi" Ladder Working Paper no 17
6. Uthayakumar, S.S . and Sivatharsan P (2012) என்பவர்களால் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் மீனவக் குடும்பங்களின் வறுமை நிலை பற்றிய ஓர் ஆய்வு, International Research Conference – 2012, University of Jaffna, Sri Lanka p:265-66.
7. பொருளியல் நோக்கு (2010), பெப்.ஃ. மார்ச் - பக்கம் - 44 – 48 , 59 – 62
8. கிராம அபிவிருத்தி திணைக்களம் (2008) வட மாகாணம் நிலைபேறான வாழ்வாதார அணுகுமுறை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுககும், நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களுக்குமான பயிற்சிப் பட்டறை
9. வடக்கு மாகண வருடாந்த புள்ளிவிபரத் திரட்டு ( பல்வேறு ஆண்டுகள்)
10. மத்தியவங்கி ஆண்டறிக்கை (பல்வேறு ஆண்டு)